

தி.மு.க. தலைமையிலான 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமையில் கடலூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வெற்றி வேட்பாளர் டாக்டர் எம்.கே. விஷ்ணு பிரசாத்தை ஆதரித்து, திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளர் அறிமுகம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் கீழ்செறுவாய் கலைஞர் திடலில் நடைபெற்றது. உடன் 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம் கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் கூட்டத்தில் தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவரும் கும்பகோணம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளருமான சு.க.முத்துசெல்வம் சிறப்புரையாற்றினார். அவைத் தலைவர் யு.எஸ்.ஆர்.லோகநாதன் தேர்தல் பணி குறித்த சிறப்பு அம்சங்களை எடுத்துரைத்தார்கள். நிகழ்வில் ஒன்றிய துணைச் செயலாளர்கள் டி.எஸ்.சண்முகம், தங்கத் தியாகராஜன், பொருளாளர் சி.இளங்கோ, மாவட்ட பிரதிநிதிகள் வி.மணிவாசகம், ஆர்.அன்பழகன், டி.குணாளன், சோழ நாடு கூட்டுறவு சங்க துணைத் தலைவர் ஆர்.சூரியமூர்த்தி, பகுதி கழகச் செயலாளர்கள் என்.சசிகுமார், டி.கோவிந்தராஜ், எ.செல்வராஜ் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு களப்பணி தொடர்பான ஆலோசனை வழங்கப்பட்டது .

### நாமக்கல்லில் சிறப்பு முட்டை ஏற்றுமதி மையம் அமைக்கப்படும் என அறிவிப்பு!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை கோழிப் பண்ணையாளர்கள் சந்தித்து நன்றி!

நாமக்கல், ஏப். 2-

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் நாமக்கல்லில் சிறப்பு முட்டை ஏற்றுமதி மையம் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியானது. இதன் மூலம் முட்டைகள் ஏற்றுமதி உலகம் முழுவதும் செய்வதற்கு வாய்ப்பாக அமைவதுடன் பண்ணையாளர்களின் வாழ்க்கை தரம் உயரும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

நாமக்கல் மண்டலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு 6 கோடி முட்டை கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் நாள்தோறும் சுமார் 5 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தேசிய அளவில் முட்டை உற்பத்தியில் நாமக்கல் மண்டலம் தனிச் சிறப்பு பெற்றுள்ளது. இவை அனைத்தும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகள், கேரளா, ஆந்திரா மற்றும் வட மாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும் நாமக்கல் மண்டலத்தில் இருந்து முட்டை ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் நாமக்கல்லில் சிறப்பு முட்டை ஏற்றுமதி மையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வந்தது.

இந்நிலையில் தி.மு.க. நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் இதனை இடம்பெற வலியுறுத்தி தி.மு.க. தேர்தல் அறிக்கை குழு உறுப்பினரும், எம்.பியுமான இராஜேஸ்குமார் மூலம் சேலம் வந்த தி.மு.க. தேர்தல் அறிக்கை குழு தலைவர் கனிமொழி எம்.பி.யிடம் கோரிக்கை மனுவினை வழங்கினர். இதனை தொடர்ந்து வெளியான திமுக தேர்தல் அறிக்கையில் நாமக்கல்லில் சிறப்பு முட்டை ஏற்றுமதி மையம் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதன் மூலம் முட்டைகள் ஏற்றுமதி உலகம் முழுவதும் செய்வதற்கு வாய்ப்பாக அமைவதுடன் பண்ணையாளர்களின் வாழ்க்கை தரம் உயரும் என்று உறுதியுடன் உள்ளனர்.

இதையடுத்து திமுக தேர்தல் அறிக்கையில் நாமக்கல்லில் சிறப்பு முட்டை ஏற்றுமதிமையம்அமைக்கப்படும் என அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டுள்ளார்.


ஈரோட்டில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலையில் தமிழ்நாடு கோழி பண்ணையாளர்கள் மார்கெட்டிங் சொசைட்டி தலைவர் வாங்கிலி சுப்ரமணியம், தமிழ்நாடு கோழி பண்ணையாளர்கள் சங்க தலைவர் சிங்கராஜ், முட்டை ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் பன்னீர்செல்வம் ஆகியோர் சந்தித்து நாமக்கல்லில் சிறப்பு முட்டை ஏற்றுமதி மையம் அமைக்கப்படும் என நாடாளுமன்ற தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றதற்கு தங்களது நன்றியையும், ஆதரவையும் தெரிவித்தனர். இதன் தொடர்ச்சியாக கோழி பண்ணையாளர்கள் சங்கத்தினர் தமிழக முதல்வரை சந்தித்து நன்றியையும் ஆதரவையும் தெரிவித்தனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மலையரசன் ஹோட்டல் கடையில் தோசை சுட்டு உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். அப்போது கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மாவட்டப் பொருளாளர் ஸ்ரீராம், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர்கள் மூர்த்தி, சிவராமன், மருதமுத்து மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி.எம். ஷா
### ஏப்ரல் 2 (2014)



**கன்னியாகுமரி மாவட்டக் கழகச் செயலாளராக 1959ல் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். 1993ஆம் ஆண்டு மாவட்ட பொறுப்புக்குழு தலைவர், 1999ஆம் ஆண்டு மாவட்டப் பொறுப்பாளர் ஆகிய பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.**

**மேலும் கழக பொதுக்குழு, செயற்குழு, சொத்து பாதுகாப்புக்குழு, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**1965 முதல் 1990 வரை மற்றும் 1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை தொடர்ந்து தொடர்ந்து 30 ஆண்டுகள் வடக்கு சூரங்குடி ஊராட்சி தலைவராக மூன்று முறை போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு மக்கள் நலப் பணியாற்றியவர்.**

**1976ஆம் ஆண்டு அவசரநிலைக் காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்துள்ளார். மேலும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மணப்பாறை பகுதியில்

# கரூர் வேட்பாளர் ஜோதிமணி வாக்குச்சேகரிப்பு!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பிரச்சாரம்!

கரூர், ஏப். 2-

கரூர் நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணியின் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ஜோதிமணிக்கு திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தலைமையில், மணப்பாறை ஒன்றியம் புத்தநத்தம், இடையப்பபட்டி, பண்ணப்பட்டி, மானாகுன்றம், அழகு கவுண்டன்பட்டி, வலையப்பட்டி இன்னும் பல்வேறு பகுதியில் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது மற்றும் தெகுதி பொறுப்பாளர் சேகரன், தி.மு.க. மாவட்டக் கழக நிர்வாகி கள் கோவிந்தராஜ், குணசேகரன், ஒன்றிய செயலாளர் ராமசாமி, ஒன்றிய பெருந்தலைவர் அமிர்தவல்லி ராமசாமி, மணப்பாறை தி.மு.க. மாவட்ட அணி அமைப்பாளர் கிருஷ்ண கோபால் மற்றும் மாவட்ட ஒன்றியக் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். பிரச்சாரத்தின் போது பெண்கள் அமைச்சர் மற்றும் வேட்பாளருக்கு ஆரத்தி எடுத்து வரவேற்பு அளித்தனர்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:

நான் திருச்சியில் இப்தார் நோன்பை முடித்துக் கொண்டு நேரடியாக இந்த பகுதிக்கு பிரச்சாரத்திற்கு வந்திருக்கின்றேன். நான் வந்திருக்கின்ற நேரத்தில் எம்.பி.ஜோதிமணி அவர்கள் சரியாக சி.ஏ.ஏ. சட்டத்தை குறித்து பேசிக் கொண்டிருக்கிறார். நாடாளுமன்றத்தில் நமக்கு இருக்கும் உறுப்பினர்கள் ராஜ சபா எம்.பி. ஐந்து நபர்கள் மட்டுமே மொத்தம் பதிவான எதிராக வாக்குகள் 99 ஆதரவாக பதிவானது 124 அ.தி.மு.க.வின் ஆதரவோடு 13 வாக்குகள் பெற்று சி.ஏ. ஏ. சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அன்றைய தினம் நமது கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த சட்டத்தை ஆதரிக்க வேண்டாம் என கேட்டும் மீறி ஆதரித்துள்ளார்கள். இன்றைய தினம் பி.ஜே.பி அ.தி.மு.க.விற்கும் எந்த வித ஒட்டும் உறவும் இல்லை என்று முன்னாள் முதல்வர் எடப்பாடியார் கூறிக் கொள்கிறார் .

நாம் அனைவரும் அண்ணன் தம்பிகளாக வாழ்கின்ற மாநிலம் தமிழ்நாடு இதை பிரித்தாளும் சூழ்ச்சியை செய்கிறது பாரதிய ஜனதா. இன்றைய தினம் நமது முதல்வர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியை பெட்ரோல் விலை டீசல் விலை குறைப்பு சிறு பான்மையினர் நலனை பாதிக்கும் எதிர்ப்பான சட்டத்தை தூக்கி எறிவோம் எனக் கூறியிருக்கின்றார்.

இந்தியா முழுவதும் இருக்கின்ற வாகனங்களுக்கான சுங்கச்சாவடிகள் அகற்றப்படும் என்கின்ற வாக்குறுதி கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசிய வங்கிகளில் வாங்கின விவசாயிகளின் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்ற வாக்குறுதி ஏழை எளியோர் நலன் காக்கும் வாக்குறுதிகளை நாம் முதல்வர் தந்திருக்கின்றார். அவர்கள் அம்பானிக்கும் அதானிக்கும் மட்டுமே ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என பல்வேறு அரசின் திட்டங்களையும் மத்திய அரசின் செயல்பாடு இன்மையும் எடுத்துக் கூறி இது நாடாளுமன்றத் தேர்தல் மட்டுமல்ல, இது நாட்டைக் காக்கின்ற போர்.

இவ்வாறு அவர் பேசினார்.

அதனைத் தொடர்ந்து கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி அவர்களுக்கு கை சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார்.

### தி.மு.க. தலைமையிலான 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ எம்.பி. தேர்தல் பிரச்சாரம்!



**03.04.2024 புதன் தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 5 மணி 139ஆவது வார்டு. ஜபர்கான்பேட்டை, கெங்கையம்மன்கோவில் திடல் (சைதாப்பேட்டை தொகுதி)

மாலை 7 மணி திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி சிட்லபாக்கம்,வரதராஜாதிரையரங்கம்அருகில்(தாம்பரம்தொகுதி)

**04.04.2024 வியாழன்மாலை 4 மணி வட சென்னை நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 6 மணி மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி

**06.04.2024 சனி காலை 11 மணி தேர்தல் அறிக்கை வெளியீடு, திருச்சி**

மாலை 4 மணி பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி (பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி)

6 மணி திருச்சி நாடாளுமன்றத் தொகுதி (ஸ்ரீரெங்கம் சட்டமன்றத் தொகுதி)

**07.04.2024 ஞாயிறு சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 4 மணி (அரியலூர் சட்டமன்றத் தொகுதி)

6 மணி திருச்சி நாடாளுமன்றத் தொகுதி (திருச்சி)

**08.04.2024 திங்கள் மாலை 5 மணி தஞ்சாவூர் நாடாளுமன்றத் தொகுதி (தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதி)**

6.30 மணி திருச்சி நாடாளுமன்றத் தொகுதி (திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி)

**09.04.2024 செவ்வாய் திருச்சி நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 4 மணி ஆதனக்கோட்டை
5 மணி கந்தர்வகோட்டை
6 மணி கறம்பக்குடி
7 மணி புதுக்கோட்டை

**10.04.2024 புதன்**

மாலை 4 மணி இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதி, பரமக்குடி
6.30 மணி மதுரை நாடாளுமன்றத் தொகுதி

**11.04.2024வியாழன் விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 5 மணி சிவகாசி சட்டமன்றத் தொகுதி
மாலை 7 மணி சாத்தூர் சட்டமன்றத் தொகுதி

**12.04.2024 வெள்ளி தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 4 மணி கோவில்பட்டி
மாலை 5.30 மணி விளாத்திகுளம்
மாலை 7.00 மணி தூத்துக்குடி

**13.04.2024 சனி தென்காசி நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 4 மணி திருவேங்கடம்
மாலை 5 மணி சங்கரன்கோவில்
மாலை 6 மணி புளியங்குடி
மாலை 7 மணி கடையநல்லூர்

**15.04.2024 திங்கள்**

மாலை 5 மணி ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி, ஈரோடு
7 மணி திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதி, திருப்பூர்

**16.04.2024 செவ்வாய் நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி,**

மாலை 5 மணி மேட்டுப்பாளையம்
மாலை 7 மணி கோயமுத்தூர் நாடாளுமன்றத் தொகுதி, கோயமுத்தூர்

**தலைமைக் கழகம்,**
**மறுமலர்ச்சி தி.மு.க,**
**'தாயகம்',**
**சென்னை 8**



கள்ளக்குறிச்சி நகரத்தில் தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்து தி.மு.க. வேட்பாளர் மலையரசனை ஆதரித்து தெற்கு மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. திறந்த வேனில் சென்று வாக்கு சேகரித்தார், அப்போது 'இந்தியா' கூட்டணி தி.மு.க. வேட்பாளர் மலையரசன் விவசாயிகள் பயன் படுத்தும் மாட்டு வண்டியில் சென்று பொது மக்களிடத்திலும் வாக்குச் சேகரித்தார். அருகில் கள்ளக்குறிச்சி தொகுதி பொறுப்பாளர் மாசிலாமணி, நகரக் கழகச் செயலாளர் சுப்பராயலு உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத்தலைவரும், நலவாரிய உறுப்பினருமா ரெ.தங்கம், பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் கே.என்.அருண் நேருவை ஆதரித்து வழுதியூர், ஆதிக்குடி, கல்லக்குடி சமத்துவபுரம், கே.கே.நகர், திடீர் குப்பம்,அந்தநல்லூர் பகுதி மாற்றுத்திறனாளிகள் குடும்ப வாக்காளர்களை நேரில் சந்தித்து கழக பொற்கால ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து வாக்குச் சேகரித்தார். திருச்சி வடக்கு மாவட்ட இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளரும், தலைமைக் கழக சொற்பொழிவாளர் துறையூர் அ.பாஸ்கர், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில பொருளாளர் டாக்டர் எஸ்.நசீம், துணைப்பொதுச்செயலாளர் ஆர்.சீனிவாசன், பி.ஆர்.ஓ.ஆனந்தி கழக நிர்வாகிகளும், மகளிர்களும் பங்கேற்றனர்.